SUTHANTHIRA THIRUNAAL AMUDHA PERUVIZHA
TAMIL NADU

சுருக்கம்

மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்ட திரு. சு.கௌதம் என்பவரது பணியினை வரன்முறை செய்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மீன்வளம் மற்றும் மீனவர் நலன் (மீன்–2) துறை

அரசாணை (2டி) எண்.2

நாள் 23.02.2022
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ, மாசி – 11

படிக்கப்பட்டன :–

1) அரசாணை (நிலை)எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ1) துறை, நாள் 23.01.2020.
2) ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை அவர்களின் கடித ந.க.எண்.4266/எம்.5/2020, நாள் 10.11.2021.

-----

**ஆணை:**

மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையர், சென்னை மீன்வளத்துறை இயக்குநர் அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்த ம. சுரேஷ்குமார் 27.01.2020 அன்று பணியிடை காலமானதையடுத்து, அவரது மனைவியும் வாரிசுதாரருமான திருமதி. சு.ஜெயா தனது குடும்பம் வறிய நிலையில் உள்ளதாக தெரிவித்து அவரது மகனான திரு. சு.கௌதம்–க்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்குமாறு கோரிய 17.02.2020 நாளிட்ட விண்ணப்பமானது, அரசு ஊழியர் இறந்த மூன்றாண்டுகளுக்குள் அளிக்கப்பட்டது என்றும், திரு. சு.கௌதம் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்ததையடுத்து, போதிய வயது வரம்பை பூர்த்தியடைந்ததையடுத்தும் காலஞ்சென்ற அரசுப் பணியாளரின் குடும்பத்தில் பொருள் ஈட்டுபவர் வேறு எவரும் இல்லை என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் தான் உள்ளது என சோழிங்கநல்லூர் வருவாய் வட்டாட்சியர் சான்றளித்துள்ளதன் அடிப்படையிலும், திரு. சு. கௌதம் என்பவரை கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளராக மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் தற்காலிகமாகப் பணிநியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வருகிறார் என்றும், பணி நியமன நாளில் அவரது வயது 20 ஆண்டுகள் எனத் தெரிவித்து, கருணை அடிப்படையில் மீன்வளத்துறையில்

தற்காலிகமாகப் பணியமர்த்தப்பட்ட திரு. சு.கௌதம் என்பவரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு அரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மேற்காணும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆணையரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலித்து, அதனை ஏற்க முடிவு செய்து, கருணை அடிப்படையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் மீன்வளத்துறை ஆணையர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக 04.01.2021 முற்பகல் முதல் தற்காலிகமாகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு. சு.கௌதம் என்பவர் அப்பணியிடத்திற்கு தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி அரசு ஆணையிடுகிறது.

3. திரு. சு.கௌதம், இளநிலை உதவியாளரின் பணியானது அவர் பணியமர்த்தப்பட்ட நாளான 04.01.2021 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்படுவதால், அவர் வருடாந்திர ஊதிய உயர்வு உரிய விதிகளின்படி பெறத் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.2197/க்யூ.1/2022-1, நாள் 08.02.2022 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4340/ஜி3/2022-1, நாள் 21.02.2022-இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தெ.சு.ஜவகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
ஆணையர், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை- 35.
திரு. சு.கௌதம், இளநிலை உதவியாளர்,
(மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை மூலமாக)

<u>நகல்</u>
மாண்புமிகு அமைச்சர் (மீன்வளம் மற்றும் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்பு) அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை - 9.
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை, சென்னை - 9.
மனிதவள மேலாண்மை துறை, சென்னை - 9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசு கூடுதல் தலைமை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
இருப்புக்கோப்பு / உதிரிகள்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

S. Thiru 23/2/2022
பிரிவு அலுவலர்
23.02.2022